## People's Watch
No.6, Vallabai Road, Chokkikulam, Madurai - 625 002.
Phone: 0452-2531874 & 2539520 Fax: 0452 - 2531874
E.mail: info@pwtn.org
Web: www.pwtn.org


30.6.2011

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள்
தமிழ்நாடு அரசு தலைமைச் செயலகம்
அண்ணாசாலை
சென்னை 60002

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கு

மக்கள் கண்காணிப்பகத்தின் இனிய வணக்கம்.

மதுரையைத் தலைமையிடமாகக் கொண்டு மக்கள் கண்காணிப்பகம் அமைப்பு கடந்த 16 ஆண்டுகளாக, தமிழக அளவிலும், 2006 முதல் இந்தியா முழுவதிலுமுள்ள 18 மாநிலங்களிலும், மனித உரிமைக் காப்புப் பணியில் சர்வதேச மனித உரிமை அமைப்புகளுடன் இணைந்து செயல்பட்டு வருகிறது.

எவ்வித அரசியல் கட்சி சார்புமின்றியும், தனி நபர் மீதான விருப்பு, வெறுப்புக்களைக் கடந்தும் மனித உரிமை அரங்கில் அரசைக் கண்காணித்து மனித உரிமைக் கலாச்சாரத்தை வளர்த்தெடுக்கும் விதமாக மனித உரிமைகளைக் காத்தல், வளர்த்தல், வாழ்நெறியாக்கல் என்ற முறையில் எங்களது பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. தமிழகத்தில் கடந்த 25.6.4.2011 முதல் 30.6.2011 முடிய எங்கள் அமைப்பின் கவனத்திற்கு வந்த மனித உரிமை மீறல் செய்திகளை உங்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறோம்.

**25-6-2011 முதல் 30-6-2011 முடிய இவ்வாரத்தில் எங்கள் கவனத்திற்கு வந்த மனித உரிமை மீறல் செய்திகள்**

| | | |
|---|---|---|
| 1. | என்கவுண்டர்/காவல் மரணம் | – |
| 2. | சிறைக் கைதி மரணம் / வன்முறை | – |
| 3. | பெண்கள் மீதான வன்முறை | 16 |
| 4. | காவல் நிலையச் சித்திரவதை | 5 |
| 5. | வகுப்பறை வன்முறை | 7 |
| 6. | தலித்துகள் மீதான வன்முறை | 4 |
| 7. | அரசு அதிகாரிகள் / காவல் துறையினர் லஞ்சம் பெற்றது. | 2 |
| 8. | மருத்துவர்கள் அலட்சியம் | 1 |
| 9. | கொத்தடிமை | – |
| 10. | பெண் சிசு கொலை | 2 |
| 11. | குழந்தை திருமணம் | 2 |
| 12. | குழந்தை தொழிலாளர் மீட்பு/ வன்முறை | 7 |
| 13. | மீனவர்கள் மீது தாக்குதல் | 1 |
| 14. | கந்து வட்டிக் கொடுமை | 2 |
| 15. | கட்டப்பஞ்சாயத்து / சமூகப் புறக்கணிப்பு | – |
| 16. | ரேசன் அரிசி கடத்தல் | 4 |
| 17. | மணல் கொள்ளை | 2 |
| 18. | திருநங்கைகள் மீதான வன்முறை | – |

மக்கள் கண்காணிப்பகம்

| | | |
|---|---|---|
| 19. | பழங்குடியினர் மீதான வன்முறை | – |
| 20. | முதியவர்கள் மீதான வன்முறை | – |
| 21. | மாற்றுத்திறனாளர்கள் மீதான வன்முறை | – |
| 22. | பொதுவானவை | 2 |
| | மொத்தம் | 57 |

மேற்கண்ட சம்பவங்களில் தாங்கள் உடனடியாகத் தலையிட்டு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ள அன்புடன் வேண்டுகிறோம்.

இதுபோன்ற காவல் மரணங்களும், சித்திரவதைகளும் தொடர்ந்து நிகழா வண்ணம் தடுக்க ஆவன செய்ய வேண்டுகிறோம்.

நன்றி,

நம்பிக்கையுடன் மனித உரிமைப் பணியில்

**(ஹென்றி டிபேன்)**
நிர்வாக இயக்குநர்

**நகல்கள்:**

தமிழகத் தலைமை நிலையச் செயலாளர் மற்றும் உயரதிகாரிகள்

அனைத்து மாவட்ட ஆட்சியாளர்கள்

தமிழகக் காவல்துறைத் தலைவர் மற்றும் உயரதிகாரிகள்

அனைத்து மாவட்டக் காவல்துறைக் கண்காணிப்பாளர்கள்

அனைத்து மனித உரிமை ஆணையங்கள்

அனைத்து அரசியல் கட்சிகள்

மக்கள் கண்காணிப்பகம்

# தமிழகத்தில் மனித உரிமை மீறல்கள் - தொகுப்பு-25
## 25.6.2011 முதல் 30.6.2011 முடிய

| வ. எண் | செய்தி கிடைத்த நாள் | மாவட்டம் / பெயர் விபரம் மற்றும் சம்பவ விபரம் | பிரிவு | தகவல் பெற்றது. |
|---|---|---|---|---|
| 1635. | 25.6.2011 | **சிவகங்கை மாவட்டம்:** காரைக்குடி அருகே மதுரை பழங்காநத்தத்தைச் சேர்ந்த முருகன் தனது காரை பொது இடத்தில் நிறுத்திச் சென்றார். இக்கார் சாக்கோட்டை காவல் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டது. காவல்நிலைய சென்று தனது காரை கேட்டார். எஸ்ஐ. சிவமுருகன், எஸ்ஐ காமாட்சி இருவரும் ரூபாய் 3000 லஞ்சம் கேட்டதாக புகார். இருவரும் கைது. | லஞ்சம் | தினமணி |
| 1636. | 25.6.2011 | **ஈரோடு மாவட்டம்:** புதுப்பாளையத்தைச் சேர்ந்த சாமித்துரை மகன் பொன்னையன் (5 ம் வகுப்பும்), பிரியங்கா (4–ம் வகுப்பு) நஞ்சனா புரத்தில் உள்ள கொங்கு நேஷனல் மெட்ரிக் பள்ளியில் படித்து வந்தனர். நீதிபதி ரவிராஜா பாண்டியன் அறிவித்த கட்டணத்தை விட கூடுதல் கட்டணம் செலுத்ததால் இரு மாணவர்கள் பள்ளியில் இருந்து வெளியேற்றம். | கூடுதல் கல்விக் கட்டணம் & வகுப்பறை வன்முறை | தீக்கதிர் |
| 1637. | 25.6.2011 | **சேலம் மாவட்டம்:** சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த 15 குழந்தைகள் பீகார், மற்றும் பெங்களூர் போன்ற இடங்களில் கட்டாயமாக வேலைக்கு அனுப்பினர். இவர்களை மீட்டு சேலம் டான்பாஸ்கோ பள்ளியில் சேர்ப்பு. | குழந்தைகள் மீதான வன்முறை | டெக்கான் கிரானிக்கல் |
| 1638. | 25.6.2011 | **சென்னை மாவட்டம்:** நீலாங்கரை அருகே உள்ள வெட்டுவாங்கேணியைச் சேர்ந்த மோகன் மகன் தீபக்(12) அதேபகுதியில் உள்ள தனியாா மெட்ரிக்குலேசன் பள்ளியில் 9–ம் வகுப்பு படித்துவந்தார். வகுப்பறையில் ஆசிரியை கிரேசி மாணவன் தீபக்கை இரும்பு ராடில் அடித்ததில் மாணவனின் கண் பாதிப்பு. புகார். | குழந்தைகள் மீதான வன்முறை & வகுப்பறை வன்முறை | தினத்தந்தி |
| 1639. | 25.6.2011 | **சென்னை மாவட்டம்:** சென்னை ரேசன் கடைகளில் 20 கிலோ ரேசன் அரிசி எடை குறைவு இல்லாமல் வழங்கப்படுகிறதா என பொதுமக்களிடம் அமைச்சர்கள் அக்ரி எஸ்.எஸ்கிருஷ்ணமூர்த்தி விசாரணை. பல்வேறு குறைபாடுகள் இருப்பதாக புகாா. | ரேசன் ஊழல் | தினத்தந்தி |
| 1640. | 25.6.2011 | **விருதுநகர் மாவட்டம்:** அருப்புக்கோட்டை அருகே காரியாபட்டியைச் சேர்ந்த வெள்ளைச்சாமி மனைவி ராதா(27). கணவர் மற்றும் குடும்பத்தார் கூடுதல் வரதட்சணை கேட்டு துன்புறுத்தியதாகவும், மற்றும் மாமனார் | பெண்கள் மீதான பாலியல் வன்முறை & | தினமலர் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | பாலியல் தொந்தரவு கொடுத்ததாகவும் புகார். | வரதட்சணைக் கொடுமை | |
| 1641. | 25.6.2011 | **நாமக்கல் மாவட்டம்:** திருச்செங்கோடு தாலுகா கொன்னையாறு சத்யா நகரைச் சேர்ந்த சந்திரன் தனக்கு சொந்தமான இடத்திற்கு பட்டா மாறுதல் கோரி விண்ணப்பம். வி.ஏ.ஓ., மணி ரூபாய்1,000 லஞ்சம் கேட்டதாக புகார். | லஞ்சம் | தினமலர் |
| 1642. | 25.6.2011 | **புதுச்சேரி மாநிலம்:** புதுச்சேரி சட்டசபை வளாகத்துக்குள் அத்துமீறி புகுந்த போராட்டம் நடத்திய தற்காலிக ஊழியர்கள் மீது காவலர்கள் தடியடி. | காவல் நிலையச் சித்திரவதை | தினமலர் |
| 1643. | 25.6.2011 | **மதுரை மாவட்டம்:** மேலூர் அருகே தனியாமங்கலத்தைச் சேர்ந்த சாவித்ரி(45) அதே பகுதியில் ஊராட்சி மன்ற தலைவியாக உள்ளார். சாவித்ரியின் தம்பி ஆண்டிச்சாமி இவர்களுக்குள் ஏற்பட்ட குடும்பத்தகராறில் ஆத்திரமடைந்த ஆண்டிச்சாமி தாக்கியதாக புகார். | பெண்கள் மீதான வன்முறை | தினகரன் |
| 1644. | 26.6.2011 | **மதுரை மாவட்டம்:** மதுரை திருமால்புரத்தைச் சேர்ந்த பாண்டி மகள் முத்துச்செல்வி(17). கோரிப்பாளையத்தில் கம்ப்யூட்டர் பயிற்சி மையம் சென்ற முத்துச்செல்வியைக; காணவில்லை என புகார். | பெண்கள் மீதான வன்முறை | தினகரன் |
| 1645. | 26.6.2011 | **மதுரை மாவட்டம்:** திருமங்கலம் அருகே வாழவந்தாள்புரத்தைச் சேர்ந்த அழகன் மகள் பாண்டியம்மாள்(15). பெற்றோர் அடிகக்டி சண்டைபோடுவதால் மனமுடைந்த பாண்டியம்மாள் விஷம் குடித்துத் தற்கொலை. | குழந்தைகள் மீதான வன்முறை & தற்கொலை | தினகரன் |
| 1646. | 26.6.2011 | **மதுரை மாவட்டம்:** திருப்பத்தூரைச் சேர்ந்த செல்வம் மனைவி செல்வி(29). மாட்டுத்தவணி பேருந்தில் வந்தபோது எதிர் இருக்கையில் அமர்திருந்த தஞ்சை கரம்பை மெல்பூரைச் சேர்ந்த தேமுதிக நிர்வாகி சந்தானகிருஷ்ணன்(35), ராஜேந்திரன், மூர்த்தி மூவரும் பேருந்தில் இருந்த செல்வியிடம் சில்மிஷம் செய்ததாக புகார். | பெண்கள் மீதான பாலியல் வன்முறை | தினகரன் |
| 1647. | 26.6.2011 | **விழுப்புரம் மாவட்டம்:** திண்டிவனம் அருகே அகூர் கிராமத்தைச் சேர்ந்த சுந்தர்(27) மனைவி நவமணி(26) பிரசவத்திற்காக மண்ணம்பூண்டி ஆரம்ப சுகாதார நிலையத்தில் சேர்க்கப்பட்டார். அங்கு மருத்துவர்கள் இல்லை. பெண் குழந்தை பிறந்த சில நிமிடங்களில் குழந்தை இறந்ததால் உறவினர்கள் மருத்துவமனை முற்றுகை. | பெண்கள் மீதான வன்முறை & மருத்துவமனை மருத்துவர்கள் அலட்சியம் | தினகரன் |
| 1648. | 26.6.2011 | **மதுரை மாவட்டம்:** அண்ணாநகர், | கந்தவட்டிக் | தீக்கதிர் |



மக்கள் கண்காணிப்பகம்

| | | | | |
|---|---|---|---|---|
| | | மௌவுலானா சாகிப் தெருவைச் சேர்ந்த கோபிநாத்(52), மனைவி கிருஷ்ணவேணி(36), மகன் வெங்கடேசன்(15). கடன் தொல்லையால் மனமுடைந்தமூவரும் தீயிட்டுத் தற்கொலை. | கொடுமை & தற்கொலை | |
| 1649. | 26.6.2011 | **திருப்பூர் மாவட்டம்:** திருப்பூர் மங்கலம் ரோடு பாரப்பாளையம் முருகம்பாளையம் ரோட்டில் உள்ள பாழடைந்த பொது கிணற்றில் பிறந்த சில நிமிடங்களே ஆன ஆண் குழந்தை இறந்த நிலையில் கிடந்ததாக புகார். | சிசுக்கள் மீதான வன்முறை | தினமலர் |
| 1650. | 26.6.2011 | **சென்னை மாவட்டம்:** வியாசர்பாடி, ஏ கல்யாணபுரத்தைச் சேர்ந்த யோகேஷ் மனைவி ருக்மணி, குழந்தைகள் யுவராஜ் (3), தீபிகா(1), கணவன் மனைவி தகராறில் மனைவியை கத்தியால் குத்தி கொலை செய்ததோடு, குழந்தைகளை தொலைபேசி ஒயரால்தூக்கிட்டு கொலை செய்ததாக கைது. | பெண்கள் மீதான வன்முறை & குழந்தைகள் மீதான வன்முறை & கொலை | தினமலர் |
| 1651. | 26.6.2011 | **மதுரை மாவட்டம்:** அவனியாபுரம் அருகே அப்பாஸ் அலி மகள் பர்ஷானா(9)வின் வலதுகை சுண்டுவிரலில் காயம் ஏற்பட்டு அப்பகுதியில் உள்ள மருத்துவர் செல்வராஜிடம் சிகிச்சை. மருத்துவரின் தவறான சிகிச்சையால் அவரது சுண்டுவிரல் அகற்றப்பட்டதாக புகார். | குழந்தைகள் மீதான வன்முறை | தினமலர் |
| 1652. | 26.6.2011 | **திருச்சி மாவட்டம்:** ராமநாதபுரம் தொண்டியைச் சேர்ந்த முனியாண்டியின் மகள் பரணி(19). பெருந்துறையில் ஆசிரியர் பயிற்சி பள்ளியில் உடன் படிக்கும் மாணவன் ஜெயகாந்தன்(25). இருவரும் காதலித்தனர். இருவரும் திருச்சி வழியாக தொண்டி செல்லும் போது திருச்சியில் இறங்கினர். திருச்சி பேருந்தி நிலையத்தில் காவலர்கள் என கூறி மர்ம நபர்கள் பரணியை கடத்திச் சென்றதாக புகார். | பெண்கள் மீதான வன்முறை & கடத்தல் | தினத்தந்தி |
| 1654. | 27.6.2011 | **மதுரை மாவட்டம்:** சிலைமான் அருகே வைகை ஆற்றில் அனுமதியின்றி மணல் திருடிய டிராக்டர் பறிமுதல். டிரைவர்கள் முருகன், சங்கிலி, பாலு கைது. | மணல் கொள்ளை | தினகரன் |
| 1655. | 27.6.2011 | **மதுரை மாவட்டம்:** உசிலம்பட்டி அருகே குன்னூத்துப்பட்டியில் அசுவமாநதி செல்லும் ஓடையில் இருந்து மணலை டிராக்டர் மூலம் கடத்தி, அருகேயுள்ள தோட்டத்தில் 10 லாரி லேடு மணல் குவித்துள்ளதாக பொதுக்கள் புகார். | மணல் கொள்ளை | தினகரன் |
| 1656. | 27.6.2011 | **சேலம் மாவட்டம்:** மஞ்ரா கொல்லப்பட்டியில் அரசு நடுநிலைப்பள்ளியில் 5ம் வகுப்பு தேர்ச்சி பெற்ற 50 | வகுப்பறை வன்முறை | தினகரன் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | குழந்தைகளுக்குத் தலைமையாசிரியர் எட்வின் தனியார் பள்ளியிடம் பணம் வசூலித்துக் கொண்டு கட்டாய மாற்றுச்சான்றிதழ் கொடுத்ததாக புகார். | | |
| 1657. | 27.6.2011 | **மதுரை மாவட்டம்:** ஆனையூரைச் சேர்ந்.த அங்கமுத்து மகள் திருபூவனசுந்தரி(22). பிஎஸ்என்எல் நிறுவனத்தில் வேலை செய்யும் திருபூவனசுந்தரியை காணவில்லை என புகார். | பெண்கள் மீதான வன்முறை | தினகரன் |
| 1658. | 28.6.2011 | **மதுரை மாவட்டம்:** உசிலம்பட்டி அருகே கண்ணனூர் விலக்கு, கலுங்கபட்டி அருகே வாகனசோதனையில் போது லாரியில் கடத்தி வந்த 50 கிலோ ரேசன்அரிசி பறிமுதல். 3 பேர் கைது. | ரேசன் அரிசி கடத்தல் | தினமணி |
| 1659. | 28.6.2011 | **மதுரை மாவட்டம்:** உசிலம்பட்டியைச் சேர்ந்த தர்மராஜ் மகள் முத்துபிரியா(21) எம் கல்லுப்பட்டியில் உள்ள தனியார் பாலிடெக்னிக்கில் படித்துவரும் முத்துபிரியாவை காணவில்லை என புகார் | பெண்கள் மீதான வன்முறை | தமிழ்சுடர் |
| 1660. | 28.6.2011 | **இராமநாதபுரம் மாவட்டம்:** கடலாடி ஆம்பனூரைச் சேர்ந்த செந்தூரன்(50) மலட்டாறிலிருந்து தனது மாட்டுவண்டியில் மணல் அள்ளி கொட்டியிருந்தார். இரவு ரோந்து வந்த காவலர்கள் செந்தூரனை காவல் நிலையம் அழைத்துச் சென்று அடித்துச் சித்திவதை. பாதிக்கப்பட்ட செந்தூரன் மருத்துவமனையில் அனுமதி. சம்பவத்திற்கு காரணமாக டி.எஸ்.பி மீது நடவடிக்கை எடுக்கவேண்டும் என பொதுமக்கள் புகார். | காவல் நிலையச் சித்திரவதை | தமிழ்சுடர் |
| 1661. | 28.6.2011 | **மதுரை மாவட்டம்:** இளையான்குடி அருகே குயவர்பாளையத்தைச் சேர்ந்த முருகன் மனைவி தவசிராணி, குழந்தை உத்ரா(9). சமையல் அறையில் ஏற்பட்ட தீ விபத்தில் குழந்தை உத்ரா மரணம். | குழந்தைகள் மீதான வன்முறை | தமிழ்சுடர் |
| 1662. | 28.6.2011 | **மதுரை மாவட்டம்:** மதுரை அவனியாபுரம் பெரியார் நகரைச் சேர்ந்த லூர்துசாமி மகன் மரியசூசை அந்தோணி(36), வீரபுத்திரனிடம் கடன் வாங்கினார். மரியசூசை கடனைத் திருப்பிக் கொடுத்தும் தரவில்லை என மரியசூசையின் பசுமாடுகளை பறிமுதல். வீரபுத்திரன் கைது. | கந்துவட்டிக் கொடுமை | தினத்தந்தி |
| 1663. | 28.6.2011 | **விருதுநகர் மாவட்டம்:** சிவகாசி அருகே எம்.புதுப்பட்டியில் பட்டாசு தாயரிக்கும் பணியின் போது கேப் ரோல்கள் உரசியதில் பட்டாசு ஆலையில் விபத்து. | பட்டாசு ஆலையில் தீ விபத்து | தினத்தந்தி |
| 1664. | 28.6.2011 | **கிருஷ்ணகிரி மாவட்டம்:** ஒசூர் பார்வதி நகரைச் சேர்ந்த சாந்தாவின் 13 வயது மகள். சாந்தாவின் தம்பி மாதேஸ்(35)க்கும் சிறுமிக்கும் நடக்க இருந்த திருமணத்தை | குழந்தைத் திருமணம் | தினகரன் |

மக்கள் கண்காணிப்பகம்

| | | | | |
|---|---|---|---|---|
| | | அதிகாரிகள் தடுப்பு. | | |
| 1665. | 28.6.2011 | **தர்மபுரி மாவட்டம்:** வேளாவள்ளி கிராமத்தில் உள்ள அரசு உயர்நிலைப்பள்ளியில் 8ம் வகுப்பு மாணவர்கள் சக்திவேல்(13), பெரியண்ணன் மகன் சக்திவேல்(13) இருவரும் பள்ளி வளாகத்தல் சைக்கிள் நிறுத்தும்போது மர்ம பொருள் கிடந்துள்ளது. மர்ம பொருள் வெடித்ததில் 2 மாணவர்கள் படுகாயம். | வகுப்பறை வன்முறை | தினகரன் |
| 1666. | 28.6.2011 | **வேலூர் மாவட்டம்:** வாணியம்பாடி நியூகேட் பகுதியில் வாகன தணிக்கையின் காவலர் குமரவேல் அவ்வழியாக வந்த தாசில்தார் மதிக்குமார், தலைமையிடத்து துணை தாசில்தார் குமரேசன் இருவரிடமும் விசாரணை. இருதரப்பினரிடையே மோதல். குமாரவேல் இடமாற்றம். | காவல் நிலையச் சித்திரவதை | தினகரன் |
| 1667. | 28.6.2011 | **மதுரை மாவட்டம்:** நீலகிரி குன்னூர் அருகே பாரதி நகரைச் சேர்ந்த 18 வயது மாணவி புதுக்கோட்டையிலுள்ள கல்லூரியில் பி.காம். சி.,ஏ பயின்று வருகிறார். குன்னூர் அருகே சேலாசில் உள்ள யூனியன் வங்கியில் கல்விகடன் கோரி வங்கி மேலாளரை அணுகினார். அவர் மாணவியிடம் சில்மிஷம் செய்ததாக புகார். | பெண்கள் மீதான பாலியல் வன்முறை | தினகரன் |
| 1668. | 29.6.2011 | **கோவை மாவட்டம்:** அன்னூர் அருகில் உள்ள நல்லி செட்டிபாளையம் தலித் சமுகத்தைச் சேர்ந்த 10 வகுப்பு மாணவர் வசந்தகுமார். வீட்டில் நடந்த விசேசத்திற்காக அருகில் உள்ள கிராமமான குருக்கியபாளைம் பொதுக் குழாயில் தண்ணிர் பிடித்துள்ளார். ஆதிக்க சமூகத்தைச் சேர்ந்தவர்கள் வசந்தகுமாரை தாக்கி சித்திரவதை. பல்வேறு வகையான தீண்டாமை கடைப்பிடிப்பு. | தலித்துகள் மீதான வன்முறை | குமுதம் |
| 1669. | 29.6.2011 | **இராமநாதபுரம் மாவட்டம்:** இராமேஸ்வரத்தில் இருந்து மீன் பிடிக்க சென்ற மீனவர்கள் கச்சத்தீவு அருகே மீன் பிடித்துக் கொண்டிருந்தபோது இலங்கை கடற்படையினர் இராமேஸ்வரத்தைச் 5 படகுகளின் வலைகள் மற்றும் போட் பலகைகளை வெட்டியதாக புகார். | மீனவர்கள் மீதான வன்முறை | தீக்கதிர் |
| 1670. | 29.6.2011 | **மதுரை மாவட்டம்:** மஞ்சம்பட்டியைச் சேர்ந்த அருணாசலம் மகள் கோகிலா(20). கல்லூரியில் 2ஆம் ஆண்டு படிக்கும் மாணவியை ஆண்டார்கொட்டாரத்தைச் சேர்ந்த கார்த்திக் கடத்திச் சென்றதாக புகார். | பெண்கள் மீதான வன்முறை & கடத்தல் | தினகரன் |
| 1671. | 29.6.2011 | **மதுரை மாவட்டம்:** வாடிப்பட்டி ராமராஜபுரத்தைச் சேர்ந்த குடிநீர் வடிகால் வாரிய ஓய்வு இன்ஜினியர் சாய்.ராம்(60) மனைவி ஷியாமளா(58) மகன் | பெண்கள் மீதான வன்முறை | தினமலர் |

மக்கள் கண்காணிப்பகம்

| | | | | |
|---|---|---|---|---|
| | | சத்யநாராயணன்(28). ஆடம்பரத்திற்கு ஆசைப்பட்ட ஷியாமளா கடன் வாங்கியதால் வீட்டை விட்டு வெளியேறினார். காணமால் போன தாய் என நினைத்து அவரைப்போல் தோற்றம் கொண்ட மேலநாத்திகுளத்தைச் சேர்ந்த அமராவதி(60)யை தாக்கியதாக சத்யநாராயணன் கைது. | | |
| 1672. | 29.6.2011 | **மதுரை மாவட்டம்:** கருமாத்தூர் அருகே வடக்கம்பட்டியில் அரசு கள்ளர் மேல்நிலை மற்றும் மாணவர் விடுதியில் கட்டிடப் பணி நடைபெற்றுவரும் வேளையில் அங்கு பதுக்கி வைக்கப்பட்டிருந்த ரேசன் 7 மூடை ரேசன் அரிசி பறிமுதல். | ரேசன் அரிசி கடத்தல் | தினமலர் |
| 1673. | 29.6.2011 | **தேனி மாவட்டம்:** போடி ஜமீன்தோப்பு தெருவைச் சேர்ந்த பிச்சைமணி மகன் ராகுல்(12) பிச்சாண்டி நடுநிலைப்பள்ளியில் எழாம் வகுப்பு படிக்கும் ராகுலை வகுப்பாசிரியர் மரியசிங்கம் தரக்குறைவாக பேசியதோடு, அடித்துச் சித்திரவதை. | வகுப்பறை வன்முறை | தினமலர் |
| 1674. | 29.6.2011 | **மதுரை மாவட்டம்:** சென்னை அடுத்த பீர்க்கன்கரணை, நெடுங்குன்றம் பஜனை கோவில் தெருவைச் சேர்ந்த தனசேகரன்(22), மனைவி ரேவதி(20). 22 ந்தேதி பிறந்த தனது ஆண் குழந்தையை ரேவதி தண்ணீர் தொட்டியில் போட்டு கொலை செய்ததாக புகார். | சிசுக்கள் மீதான வன்முறை | தினத்தந்தி |
| 1675. | 29.6.2011 | **சேலம் மாவட்டம்:** மாநகராட்சி அம்மாப்போட்டை சிங்கமெத்தை பகுதியைச் சேர்ந்த பாலசுந்தரத்தின் மனைவி பத்மாவதிக்கு சொந்தமான இடத்தை போலி ஆவணங்கள் தயாரித்து அபகரித்ததாக தி.மு.க.கவுன்சிலர் ஆட்டோ மாணிக்கம் என்ற ராமசாமி மீது புகார். கைது. | பெண்கள் மீதான வன்முறை | தினத்தந்தி |
| 1676. | 30.6.2011 | **மதுரை மாவட்டம்:** மதுரை திருநகர் நெல்லையப்பபுரத்தைச் சேர்ந்த மகாராஜன்(29) மனைவி ஜரேல் சூசேல்மிக்கேல். வீட்டில் தனியா இருந்தபோத இரு பெண்கள் இவரை ஏமாற்றி நகையை பறித்துச் சென்றதாக பகார். | பெண்கள் மீதான வன்முறை | தினமணி |
| 1677. | 30.6.2011 | **புதுச்சேரி மாநிலம்:** அரியாங்குப்பத்தைச் சேர்ந்த ஜோதி அருணகிரிக்கு சொந்தமான மெழுகுவர்த்தி கம்பெனியில் வேலை செய்தார். அருணகிரியின் ஆசைக்க இணைங்க ஜோதி மறுப்பு., ஆத்திரமடைந்த அருணகிரியை வெடிகுண்டு பார்சல் அனுப்பி ஜோதியை கொலை செய்ததாக புகார். | பெண்கள் மீதான பாலியல் வன்முறை & கொலை | தினமலர் |
| 1678. | 30.6.2011 | **மதுரை மாவட்டம்:** திரமங்கலம் அருகே உள்ள சித்தூர் ஊராட்சி நடுநிலைப்பள்ளியில் தலைமையாசிரியர் சந்திரன் தலித் | தலித்துகள் மீதான | தீக்கதிர் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | சமூகத்தைச் சேர்ந்தவர். இப்பள்ளியில் பணியுரியும் சக ஆசிரியர்கள் வேறு பள்ளிக்கு மாற்றலாகி போக முயற்சி. தலித் சமூகத்தைச் சேர்ந்த மாணவர்களையும் கட்டாயப்படுத்தி மாற்றுச்சான்றிதழ் வாங்கி வேறு பள்ளிக்கு அழைத்துச் செல்வதாகவும் புகார். | வன்முறை & வகுப்பறை வன்முறை | |
| 1679. | 30.6.2011 | **திண்டுக்கல் மாவட்டம்:** குஜிலியம்பாறை முருகேசன் மகள் அங்காள ஈஸ்வரி(7)யை அதே பகுதியைச் சேர்ந்த சரவணன் பாலியல். புகார். | குழந்தைகள் மீதான பாலியல் வன்முறை | தீக்கதிர் |
| 1680. | 30.6.2011 | **இராமநாதபுரம் மாவட்டம்:** முதுகுளத்தூர் அபிராமம் பகுதிகளில் கீழக்கன்னிசேரி அருகில் பாலத்தின் அடியில் பதுக்கிவைக்கப்பட்டிருந்த 50 முடை ரேசன் அரிசி பறிமுதல். | ரேசன்அரிசி கொள்ளை | தீக்கதிர் |
| 1681. | 30.6.2011 | **மதுரை மாவட்டம்:** உசிலம்பட்டி கவண்டன்பட்டி ரோட்டில் உள்ள மெட்ரிக்குலேசன் பள்ளியில் அரசு அறிவித்ததை விட கூடுதலாக பணம் வசூலிப்பதாக பெற்றோர் பற்றி முற்றுகை. | கூடுதல் கல்விக் கட்டணம் | தினத்தந்தி |
| 1682. | 30.6.2011 | **திருப்பூர் மாவட்டம்:** தாராபுரம் அனுமந்தாபுரத்தைச் சேர்ந்த நாகராஜ் மனைவி வசந்தி. மகள் பவித்ரா(14) அதே பகுதியைச் சேர்ந்த ராஜ்குமார்(27) நடக்க இருந்த திருமணம் செய்ய முயற்சி. அதிகாரிகள் தடுத்து நிறுத்தினர். | குழந்தைத் திருமணம் | தினத்தந்தி |
| 1683. | 30.6.2011 | **மதுரை மாவட்டம்:** தேனி ஆயுதப்படையில் காவலராக பணிபுரியும் சிவக்குமார் மனைவி நாகராணி. நத்தம் ரோட்டில் உள்ள 6–வது பட்டாலியன் குடியிப்பில் வசிக்கும் நாகராணி போலீசாக நடித்து வானங்களை நிறுத்தி வசூல் செய்ததாக கைது. அவருக்கு உடந்தையாக இருந்த 4 காவலர்கள் இருந்ததாக புகார். | காவல் நிலையச் சித்திரதை | தினத்தந்தி |
| 1684. | 30.6.2011 | **கோவை மாவட்டம்:** சிங்காநல்லூர் கக்கன்நகரைச் சேர்ந்த முனுசாமி மனைவி காத்தாயி(38). புற்றுநோயால் பாதிக்கப்பட்டு கோவை அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெறும் காத்தாயியை குடிபோதையில் இருந்த முனுசாமி ஊசி போட்டு கொலை செய்ய முயற்சி. முனுசாமி கைது. | பெண்கள் மீதான வன்முறை & கொலை முயற்சி | தினத்தந்தி |
| 1685. | 30.6.2011 | **தூத்துக்குடி மாவட்டம்:** திருச்செந்தூர் அருகே குரும்பூரை அடுத்த குழைக்கநாதபுரம் நல்லூர் மேலக்குளக்கரையில் சத்தியசீலன் என்பருக்கு சொந்தமான பட்டாசு தொழிற்சாலையில் ஏற்பட்ட தீ விபத்தில் அங்கு வேலை செய்த மாயசிலுவை(30), சின்னத்துறை(28), பால்துறை(42) மரணம். | பட்டாசு ஆலை தீ விபத்து | தினத்தந்தி |



மக்கள் கண்காணிப்பகம்

| | | | | |
|---|---|---|---|---|
| 1686. | 30.6.2011 | **இராமநாதபுரம் மாவட்டம்:** முதுகுளத்தூர் அருகேயுள்ள விளங்களத்துர் கிராமத்தைச் சேர்ந்த முத்துமணியை சந்தோக வழக்கில் கைது செய்த முதுகுளத்தூர் டிஎஸ்பி மாதவன் சாதியைச் கூறி திட்டியதோடு. காவல் நிலையம் அழைத்துச் சென்று அடித்து துன்புறுத்தியதாக டிஎஸ்பி மாதவன் மீது புகார். | காவல் நிலையச் சித்திரவதை & தலித்துகள் மீதான வன்முறை | தமிழக அரசியல் |
| 1687. | 30.6.2011 | **மதுரை மாவட்டம்:** யானைமலையில் வசிக்கும் தலித் சமூகத்தைச் சேர்ந்தவர்களை பொதுக்கிணற்றில் தண்ணீர் எடுக்க தடை விதித்தாக ஆதிக்கச் சாதியினிர் மீது புகார். | தலித்துகள் மீதான வன்முறை | Hindu |

மக்கள் கண்காணிப்பகம்